**தங்காலை நகர சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தங்காலை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தங்காலை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள்,

பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு கடையறைகளை வாடகைக்கு கொடுத்தமையால் கிடைத்திருந்த ரூபா 2,788,747 தொகைக்கான ஒரே தடவையில் பெறும் பணம் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யாமல் பலவின வைப்புக்களின் கீழ் பொறுப்பு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் படி 05 வருடங்களை மிகைத்த பின்னர் வருமானத்திற்கு எடுக்கப்படும் என. | வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய ஊழியர் கடன் பெறுமதி ரூபா 110,668 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | பெறவேண்டிய கடன் மீதிகள் எதிர்காலத்தில் தீர்க்கப்படும் என. | பெறவேண்டிய மீதிய சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | தங்காலை பஸ் நிலையத்தில் காணப்படும் 21 கடையறைகளுக்காக முன்னைய ஆண்டுகளுக்காக கடை வாடகை வருமானம் | அறவீடு செய்யாமல் இருக்க சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | வருமானங்கள் சரியாக இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 543,400 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீளளிப்பு செய்யப்படாத ஊழியர் சம்பளச் செலவு ரூபா 200,984 தொகை பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை மீளளிப்புச் செய்யப்படும் என. | பெறவேண்டிய மீதிய சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2021 ஆண்டின் போது கப் வண்டியொன்று விபத்துக்குள்ளாகியிருந்தமையால் காப்புறுதி கம்பனியொன்றிலிருந்து பெற வேண்டிய காப்புறுதி நட்டஈடு ரூபா 3,195,000 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்படும் என. | பெறவேண்டிய மீதிய சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இரண்டாவது அரையாண்டிற்காக பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,943,500 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என. | பெறவேண்டிய வருமானத்தை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு கூட்டுப்பெறுமதி ரூபா 660,367 தொகைக்கான 89 இருப்பு விடயங்கள் நடைமுறை அல்லாத சொத்து ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என. | சொத்துக்கள் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | நகர சபைக் கட்டளைச் சட்டம் | | | |
| i | பிரிவு 157 | நகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் 15 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் சட்ட ஆக்கம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 02 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் சட்ட ஆக்கஞ் செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| ii | பிரிவு 165 ஆ(1)அ | அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் மருத்துவ, நொத்தாரிஸ் மற்றும் பதிவாளர் | உயர் தொழில் வரி ஆக்கப்பட்டு அறவீடு செய்வதற்கு | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போன்ற உயர் தொழில் நடாத்தும் ஆட்களினால் உயர் தொழில் கட்டணம் அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும் என. | |
| iii | பிரிவு 171 | ரிட் கட்டளை பெறப்பட்ட 2019 ஒக்தோபர் 03 திகதி முதல் 2022 மார்ச் 31 திகதி வரை பெற வேண்டியிருந்த கடையறை வாடகை தண்டப்பணம் ரூபா 783,768 இற்கான தொகையினை அறவீடு செய்யாமல் ஏழ்மையின் காரணமாக பதிவழிப்பதற்கு 2022 மே 31 சபை அங்கீகாரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | சபை தீர்மானத்தின் படி சிட்டையிடப்பட்ட தண்டப்பணம் பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டதென . | கட்டளைச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| iv | பிரிவு 227(i) | சபையின் அங்கத்தவர் ஒருவர் 2008 ஆண்டு முதல் இதுவரை பஸ் நிலையத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான S – 01 கொண்ட கடையறை மூலம் வாடகையாளர் என உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. | உள்ளூராட்சி அணையாளரின் ஆலோசனைப்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,775,520 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 14,704,440 தொகை ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 7,050,000 | 7,439,833 | 7,136,825 | 4,991,704 | 7,050,000 | 6,703,656 | 6,077,456 | 4,688,696 |
| வாடகை | 17,734,900 | 17,262,075 | 20,314,140 | 12,835,692 | 16,364,400 | 16,945,245 | 10,476,810 | 15,887,757 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 743,000 | 1,032,979 | 950,979 | 227,000 | 953,000 | 578,010 | 603,010 | 145,000 |
| ஏனைய வருமானங்கள் | 10,649,400 | 11,891,390 | 14,544,763 | 1,035,835 | 10,633,400 | 10,703,310 | 10,906,259 | 3,689,208 |
| | ------------ | ------------- | -------------- | -------------- | -------------- | -------------- | ------------- | -------------- |
| **மொத்தம்** | **36,177,300** | **37,626,277** | **42,946,707** | **19,090,231** | **35,000,800** | **34,930,221** | **28,063,535** | **24,410,661** |
| | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======== |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 1,163 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 4,544,709 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சிவப்பு அறிவித்தில் வழங்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வீதவரி மீதியில் ரூபா 5,000 முதல் ரூபா 50,000 வரையான நிலுவை காணப்படும் 152 அலகுகள் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிடப்படாத மீதிகளுக்காக சிவப்பு அறிவித்தல் அனுப்புவதற்கும் மற்றும் ஆதனங்களை தடை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என. | நிலுவை மீதிகள் அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 112 வியாபார அலகுகளுக்கான வியாபார வரி ரூபா 287,440 தொகை மற்றும் 13 கைத்தொழில் தொடர்பாக கைத்தொழில் வரி ரூபா 19,000 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 108 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 8,887,397 தொகையினை அறவீடு செய்வதற்கு நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு இறுதி அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி டென்டர் மூலம் வாடகைக்கு கொடுக்கப்படும் பொதுச் சந்தை, மாட்டிறைச்சிக் கடை மற்றும் பரெய் கடற்கரையில் இருந்து பெற வேண்டிய ரூபா 754,366 தொகையை அறவீடு செய்வதற்கு நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 170 அ(1) மற்றும் (2) இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 390,341 தொகை எதிர் காலத்தில் பதிவழிப்பதற்கு மற்றும் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 3,193,328 தொகை அறவீடு செய்வதற்கு நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | சபையினால் வாடகையாளருடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் (தெற்கு) சுற்றறிக்கை இணங்கியிருக்கவில்லை என. | | |
| i. | சபைக்குச் சொந்தமான தங்காலை பஸ் நிலையத்தின் 07 கடையறைகள் 2016 மற்றும் 2022 இடைப்பட்ட காலப் பகுதியில் துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு சபையின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணை வாடகை கொடுக்கப்பட்டிருந்தால் சபைக்கு கடையறைகளை ஒப்படைக்கும் படி எழுத்துமூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| ii. | தங்காலை பஸ் நிலையத்தின் 14 கடையறைகளின் வாடகை அறவீடு தொடர்பாக நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 904,472 இற்கான கடை வாடகை அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாமல் இருந்தது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 91 வியாபார அலகுகள் தொடர்பாக பெற வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 109,000 | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஐ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 118,000 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான வாகனத் தரிப்பிடங்கள், தீ மற்றும் இடர் அலகுகள் மற்றும் நோயாளர் காவு வண்டிகளிலிருந்து பெற வேண்டிய கூட்டு வருமானம் ரூபா 366,505 தொகை அறவீடு செய்வதற்காக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 அ(1) மற்றும் (2) இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக எழுத்துமூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டதென. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 2.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 26 ஆவது பிரிவின் படி சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கான அதிகாரம் 2022 பெப்ரவரி 27 திகதிய 14/01/1423/2022 இலக்கம் கொண்ட மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைவரின் கடிதத்தின் மூலம் 2022 பெப்ரவரி மாதம் 24 திகதி முதல் சபைக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்யாமல் இருப்பதற்கு தீர்மானித்திருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக எதிர் காலத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என. | சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆண்டில் செயற்படுத்துவதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் சபையினால் நிறைவேற்றுவதற்காக திட்டமிட்டிருந்த ரூபா 4,100,000 தொகைக்கான 02 அபிவிருத்தித் திட்டங்கள் நகர சபையில் போதிய நிதி ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும் செயற்படுத்தியிருக்கவில்லை. | சபை அலுவல்களை தடுத்து செய்து வழங்கியிருந்த நீதி மன்றக் கட்டளை மற்றும் சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்காமையால் இந்த நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்படவில்லை என. | பாதீடு செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மே 13 திகதி அங்கீகாரம் ஒன்றின்றி பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது விபத்துக்குள்ளாகிய தலைவரினால் பயன்படுத்தப்பட்ட கப் வண்டி தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) இன் படி தயாரிக்கப்பட்ட முழுமையான அறிக்கையின் படி திருத்த வேலைக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மொத்தச் செலவு ரூபா 6,154,088 தொகை எனினும், காப்புறுதி நிறுவனத்தினால் மொத்த நட்டஈட்டுத் தொகையும் மீளளிப்புச் செய்யப்படாமையால் நகர சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 2,959,088 ஆக இருந்தது. | வழக்கு அலுவல்கள் முடிவடைந்த பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்க செயற்படுவதுடன், கடிதத்தின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக தலைவரினால் வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்ததென. | ஏற்பட்டிருந்த நட்டம் தொடர்பாக நி.பி. 104(4) பரிந்துரையின் படி செயற்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதவியில் இருந்து அகற்றப்பட்டிருந்த அங்கத்தவர் ஒருவர் சபைக் கூட்டங்களில் கலந்துகொண்டது தொடர்பாக 2022 ஆண்டு 06 மாத காலப் பகுதிக்காக ரூபா 114,661 தொகைக்கான சபை அமர்வு கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் தொலைபேசி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | நிலவுகின்ற விதிகளின் ஒழுங்கு முறைகளின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | நிதிப் பிரமாணம் 102 – 104 ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) தங்காலை பழைய சந்தை வளாகத்தில் 2021 நவம்பர் மாதம் மூன்று நாட்களாக நடைபெற்ற விற்பனவு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்காக சந்தை வளாகத்தில் பொது வாகனத் தரிப்பிடத்திற்காக | கொடிக் கம்பங்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்வதற்காக வர்த்தமானி வெளியிடப்பட்டிருக்கவில்லை என. | கட்டணம் அறவீடு செய்யவதற்காக துணை விதிகள் சட்ட ஆக்கஞ் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்டிருந்த சதுரஅடி எண்ணிக்கையை தவிர மீதியான சதுரஅடிகளில் இருந்து மற்றும் பதாகைகளுக்காக பெற வேண்டிய ரூபா 688,500 தொகை சபையின் முகாமைத்துவத்தின் கவனயீனம் காரணமாக சபைக்கு இழக்க நேரிட்டிருந்தது. | | |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் நகர சபையினால் அனுபவித்து வரும் 22 காணிகள் மற்றும் 05 கட்டிடங்களின் சட்டரீதியான உரிமை சபையின் பெயருக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை உரித்தாக்குவதற்கு பிரதேச செயலாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்க வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தங்காலை நகர மண்டபம் நவீன மயப்படுத்தும் நிர்மாண வேலைக்காக அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றுக்கு சாட்டப்பட்டு நிறைவேற்றிக் கொள்ளப்பட்டு ரூபா 1,606,305 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| i. 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9.2 பந்திக்கு இணங்காதவாறு நிர்மாண வேலை அல்லாத நகர மண்டபத்தின் ஒலிக் கட்டுப்பாட்டு முறைமையை ஆக்குதல் மற்றும் திரைச்சேலை போடுதல் ஆகிய கருமங்களும் சாட்டப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த சங்கத்தினால் அந்த கருமங்கள் இரண்டு வெளி நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றிக்கொண்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |
| ii. நகர மண்டபத்திற்காக 12.5 வொட் அளவான 50 தொகை LED மின்குமிழ்கள் வழங்கி பொருத்தியதாக சுட்டிக்காட்டி ரூபா 283,400 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்காத மின்குமிழ்கள் வழங்கி பொருத்தியதற்காக முழுத்தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்திய தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகையாக செலுத்தப்பட்ட தொகை மீண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையின் கீழ் 203 கொங்கிரீட் துண்டுகள் (Cover slab) வழங்கி பொருத்துவதற்காக ரூபா 1,398,386 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொங்கிரீட் துண்டுகளில் அடர்த்தி உரிய நியமத்திற்கு காணப்படாத போதிலும் முழுத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | புதிய தரப்பரிசோதனை அறிக்கையொன்று பெற்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன்னர் அடர்த்தி தொடர்பான அறிக்கை பெற்றுக்கொள்ள வேண்டும். |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியில் காணப்பட்ட 36 மிகைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் செயற்படுத்தியிருக்கவில்லை. | இரண்டாம் மட்டத்தில் காணப்படும் 18 மிகைகள் தொடர்பாக திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன என. | ஊழியர் மிகைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 2012 மற்றும் 2016 ஆண்டுகளின் போது இறந்திருந்த உத்தியோகத்தர் இருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த விழா முற்பணம் ரூபா 5,000 தொகையும் இடர் கடன் ரூபா 46,135 தொகையும் அறவீடு செய்வதற்கு முகாமைத்துவத்தினால் ஆக்கபூர்வமான செய்முறை எடுத்திருக்கவில்லை. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |